O.S.No.172/2019
PW1 – செல்வராஜ்

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** கிழவனுக்கு 2 வாரிசுகள். ஒருவர் பெயர் தூங்கன், மற்றவர் பெயர் விரதை ஆகும். விரதைக்கு 2 மனைவிகள் ஒருவர் ராஜமணி, மற்றொருவர் மாரத்தாள். ராஜாமணிக்கு என் தாயார் அன்னமரியா, பொண்ணம்மா என்ற 2 வாரிசுகள். மாரத்தாளுக்கு சந்தோஷம், கன்னிமரியாள், களஞ்சியம் ஆகியோர் வாரிசுகள், தூங்கனுக்கு வாரிசுகள் பாக்கியத்தம்மாள். பாக்கியத்தம்மாளின் வாரிசு 1ம் பிரதிவாதி கிரேஷ்.

**2.** தாவா சொத்து எஸ்.எல்.ஆர் காலத்தில் தூங்கன் பெயரில் இருந்தது என்றால் சரிதான். எஸ்.எல்.ஆர் காலத்தில் தாவா சொத்து தவிர மற்ற சொத்துக்கள் தூங்கன் பெயரிலும், விரதை பெயரிலும் இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தின் அளவு 1 ஏக்கர் 25 செண்ட் ஆகும். தாவா சொத்து சம்மந்தமாக பரமக்குடி ஆர்.டி.ஓ ஆபிசில் 2013 ல் வழக்கு நடந்த விவரம் எனக்கு 2016 ல் தான் தெரியும்.

**3.** அந்த வழக்கில் எனது தாயார் ஆஜராகி நடத்துள்ளார் என்றால் எனது தாயார் ஆஜராகவில்லை. நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7 ஆவணமானது ஆர்.டி.ஓ அலுவலகத்தில் நடந்த வழக்கின் உத்தரவு என்றால் சரிதான். அந்த உத்தரவில் 3ம் பக்கத்தில் எனது தாயாருக்கு ஒரு வழக்கறிஞர் ஆஜராகி இருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**4.** என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7 ஆவணமானது எனக்கு எப்போது வந்து என்று தெரியாது. மேற்படி ஆவணமானது 2013ம் ஆண்டிலேயே வருவாய் கோட்டாட்சியர் முன்பு எனது தாயார் ஆஜராகி வழக்கை நடத்தி வழக்கான உத்தரவை கடந்த 20.06.2013 லியே எனது

தாயாருக்கு அனுப்பி வைத்த உத்தரவாகும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 ஆவணத்தை எனது வழக்கறிஞர் கொடுத்திருப்பார்.

**5.** வா.சா.ஆ.7 உத்தரவை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்யவில்லை. வா.சா.ஆ.7 உத்தரவில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும், தாவா சொத்தை 2ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றும், தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 2016ம் ஆண்டு தான் பத்திரம் போடப்பட்டது பற்றி எனக்கு தெரியும்.

**6.** 2013ம் ஆண்டிலேயே 1ம் பிரதிவாதி 2ம்பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த விவரம் பற்றி வா.சா.ஆ.7 உத்தரவின் மூலம் அறிந்து கொண்டு மேற்படி பத்திரம் சம்மந்தமாக எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் சட்டகாலத்திற்கு மேலாக பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**7.** 2013ம் ஆண்டிலேயே தகவல்தெரிந்திருந்தால் நான் அப்போதோ மேல் முறையீடு செய்திருப்பேன். தாவா சொத்திற்கு தற்சமயம் 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7ன் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**8.** தாவா சொத்து எஸ்.எல்.ஆர் காலத்திலிருந்து தூங்கன் பெயரில் தனித்த பட்டா இருந்தது என்றால் சரியல்ல. அவர் மூத்தவர் என்பதால் வாரிசு அடிப்படையில் அவரது பெயரில் இருந்தது. என்னுடைய வழக்கில் பாகம் பிரித்துக்கொண்டதன் அடிப்டையில் என்னுடைய அம்மாவிற்கு தாவா சொத்து கிடைத்ததாக சொல்லியுள்ளேன்.

**9.** அந்த பாகமானது எந்த தேதியில் பிரிக்கப்பட்டது என்று எழுத்துப்பூர்வமான ஆவணம் இல்லை. என் தாயாருக்கு ஒதுக்கப்பட்டது

தவிர மற்றவர்களுக்கு எந்த எந்த சொத்துக்கள் எப்போது ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் சொன்னது போல பாகப்பிரிவினை நடக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**10.** என்னுடைய வழக்கில் வாரிசு அடிப்படையில் சொத்து கிடைத்ததாக சொல்லியுள்ளதால் விரதையின் 2வது மனைவியையும் இந்த வழக்கில் வாரிசாக சேர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். இந்த வாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதியின் எதிர் வழக்குரையில் நான் குறிப்பிட்டு மறுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**11.** 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ள பத்திரத்தில் விரதையின் 2வது மனைவியின் மகன் களஞ்சியம் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து தூங்கனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், தூங்கனுக்கு பிறகு அவரது மனைவி பாக்கியத்தம்மாளுக்கு அவரது காலத்திற்கு பின்னர் அவரது மகளான 1ம் பிரதிவாதிக்கு கிடைத்தது என்றால் சரியல்ல.

**12.** 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை கடந்த 13.01.1994ல் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து தாவா சொத்து ஒப்படைத்து விட்டார் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய காலத்திலிருந்து தற்போது வரை தாவா சொத்து 2ம் பிரதிவாதி பாத்திய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

**13.** தாவா சொத்து சம்மந்தமான எந்த வித வருவாய் துறை ஆவணமின்றி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா பத்திரம் சம்மந்தமாக சட்ட காலத்திற்கு மேலாக எந்த முயற்சியும்

எடுக்காதது என்று தற்போது பத்திரத்தை ரத்து செய்ய பரிகாரம் கோருகிறேன் என்றால் சரியல்ல.

**14.** உண்மை விவரத்தை அறிந்து தவறாக எனது தாயார் பெயரில் ஏற்பட்ட பட்டாவை பயன்படுத்தி தாவா சொத்தை அபகரிக்க வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கும் விரதைஎன்பவருக்கும் மேற்படியாரின் வாரிசுகளுக்கு எந்தவித சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.11 ஆவணமானது தாவா வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்து குறித்து பதிவு செய்யப்பட்ட 5 ம் பிரதிவாதி அலுவலகத்தின் பதிவு செய்யப்பட்ட பத்திர பதிவு ஆவணம் 33/1994 சம்மந்தமாக 5 ம் பிரதிவாதி அரசு பதிவு சட்டத்தில் சொல்லப்பட்ட வரைமுறையின் அடிப்படையிலும் சரியான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டடதன் அடிப்படையிலும் மேற்படி பதிவானது 5 ம் பிரதிவாதியால் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் 5 ம் பிரதிவாதிக்கு வேண்டப்பட்டவர்கள் இல்லை என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதி சட்டத்திற்குட்பட்டு மேற்படி ஆவணத்தை முறையாக பதிவு செய்துள்ளதால் மேற்படி ஆவணப்பதிவு சட்டப்படி நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகும் என்றால் சரியல்ல.